[5th November 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : For this purpose, Government poramboke land of about 26 acres in Kottur village near Guindy has been acquired recently. The proposal is to construct buildings for the hospital at an estimated cost of Rs. 7·80 lakhs. This is being considered as Part II Scheme for 1959–60. As regards aid from the Central Government, I have no idea at present.

*Express group of Newspapers*

* *S.N.Q.* 36.—SRI K. SATTANATHA KARAYALAR, SRI S. PAKKIRISAMI PILLAI AND SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Express Newspapers (Private), Limited, have given notice that they intend to close their publications in Madras from 1st December 1958;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) what steps the Government intend to take in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Management of Express Newspapers, Private, Limited, Madras, has given notice that it intends to close down the undertaking of its publications with effect from 1st December 1958 in view of the indiscipline prevailing among the staff and the workers;

(*c*) Government are asking the Commissioner of Labour to take up conciliation immediately.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த எக்ஸ்பிரஸ் க்ரூப்பில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்க கூடிய அடிப்படைச் சம்பளம் என்ன ? சென்னையிலே இருக்கக் கூடிய ஸ்தாபனங்களிலே இவர்கள் தான் மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள் என்பது உண்மைதானா ? அப்படியானால் குறைந்தபட்ச சம்பளமாவது தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் அந்த நிர்வாகிகளை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் இரு சாராரிடமும் தசராவின் போது நான் கலந்து பேசி ஒரு சமரச முடிவை ஏற்படுத்த முயன்றேன். அதைத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ள வில்லை. இந்தத் தகராறு நீடிக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தத் தொழிலாளர்கள் அவர்களுடைய குறைகளைக் கோர்ட்டுக்கு முன்னால் வைத்திருக்கும்போது அல்லது அவர்களுடைய பிரச்சனை ஹைக்கோர்ட்டில் இருக்கும்போது இந்தமாதிரியான நோட்டீஸ் கொடுத்து நிர்வாகத்தை மூடுவது என்பது ஒழுங்குதானா ? அப்படி ஒழுங்கு இல்லையென்றால் தொழிலாளர்களை வீணாகப் பழி வாங்கவேண்டுமென்ற காரணத்தினால் இப்படிச் செய்கிறார்கள் என்று அன்பேர் லேபர் ப்ராக்டீஸ் மூலம் முதலாளிக்குத் தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹைக்கோர்ட்டில் பல தீர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிலை நடத்துவதற்கு முடியவில்லை என்றால் அந்த ஸ்தாபனத்தை மூடிக்கொள்ளலாம் என்று தீர்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி ஒரு ஜி. ஓ. விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி மூடும்போது தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய எல்லாத் தொகையும் கொடுக்கப்பட்டாக வேண்டும். அது தான் சர்க்காரால் கவனித்துக் கொள்ளப்படவேண்டிய விஷயம்.

5th November 1958]

SRI K. ANBAZHAGAN : இந்தக் கேள்வியின் துணைக் கேள்விக்கு விடை அளிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள், முதலாளி இருவருக்குமிடையே சமரசம் செய்து வைக்க முயன்றதாகவும், அமைச்சர் சொன்னதை தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஒப்புக் கொள்ளாததால் தகராறு நீடிக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். அமைச்சர் கூறிய சமரச ஏற்பாடு என்ன என்பது தெரிந்தால் தான் அப்படித் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் மறுத்தது சரிதானு இல்லை தவருனதா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே சமாதான உடன்படிக்கைக்கு அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் யாவை என்று அமைச்சர் தெரிவிப்பாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தைப் பற்றிக் குற்றம் சாட்ட வேண்டுமென்றால் அதைச் சொல்லத்தான் வேண்டும். நேற்று இரவும் கூடச் சமரசம் செய்து வைப்பதற்காகப் பேசியிருக்கிறேன். எனக்கு இனியும் சமரசம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்தச் சமயத்தில் அந்த விவரங்களை எல்லாம் சொன்னால் அவை தகராறை வளர்க்கத் தான் பயன்படும் என்று கருதுவதால் சொல்ல முடியாமல் இருக்கிறேன்.

SRI S. LAZAR : இது போன்ற நோட்டீஸ் மற்ற இடங்களிலும் இருக்கிற அவ்வளவு ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது சென்னை ஸ்தாபனத்தை மட்டும் மூடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? சென்னையில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்திற்கும் இதர ஸ்தாபனங்களில் வெளி மாகாணத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தகராறு சென்னையில் இருக்கக் கூடிய ஸ்தாபனங்களைப் பற்றியது. இந்த நோட்டீசும் சென்னையில் இருக்கக் கூடிய ஸ்தாபனங்களுக்கு மட்டும் தான்.

SRI N. K. PALANISAMI : தொழிலாளர்களுடைய கோரிக்கை $7\frac{1}{2}$ ரூபாய் போனஸ் $4\frac{1}{2}$ ரூபாய் பஞ்சப்படி ஆகிய இந்தக் கோரிக்கையை கம்பல்சரி ஆர்ப்பிட்ரேஷனுக்கு விடுவதற்கு ஏன் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர்களுடைய தலைவர்களே தொழிலாளர்களுக்குப் பல சங்கடங்களை உண்டாக்கி விடுவது சரியல்ல. நான் முதலிலேயே மத்தியஸ்த்திற்கு விடலாம் என்று சொன்னதை தொழிலாளர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் முன்பே விடப்பட்டிருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : தொழிலாளர்களுடைய கோரிக்கை என்ன என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பல இருந்தன. கோர்ட்டுகளில் இருந்தன. ஒன்று சம்பளம் பற்றியது. இரண்டாவது 69 பேரை ரெட்ரென்ச்மெண்டு செய்து விட்டார்கள். அவர்களையே மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது. சம்பளமும் இதுவும் தான் முக்கியமானது. இன்னும் வேறு சில பிரச்சனைகளும் இருக்கின்றன.

SRI T. T. DANIEL : Sir, may I know from the Hon. Minister whether any demands of the workers have been agreed to by the management and what are the demands which the management did not agree to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just stated in Tamil that it is not in the interests of a settlement which I expect to be made that I should give details of the points in dispute.

[5th November 1958

SRI A. A. RASHEED : Sir, what is the number of labourers and staff who will be affected by the closure of the publication?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry I do not have the exact figures with me now.

SRI K. VINAYAKAM : Sir, in view of the long service which this Press has been doing towards the national cause, will the Government assure this House that they will effect a reapproachment between the management and the workers; failing this, will the Government step in and take over the management of this Press in the interests of the country?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may at once tell the hon. Member that this is not an industry which the Government can take over. Then, Sir, whether it is a national newspaper which has been doing immense service or any other industry, Government have always been doing their best to effect a fair settlement between the workers and the management.

SRI K. SATTANATHA KARAYALAR : பிரித்துவிடப்பட்ட தொழிலாளர்களைப் பற்றி டிரிப்யூனலுக்கு ரெபர் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு ஏதாவது இருக்கிறதா ? அதன் முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றியும் டிரிப்யூனலில் இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் இருக்கிறது.

9-10 a.m. SRI M. KALYANASUNDARAM : Are the Government aware that the threat of closure of this enterprise is only to coerce the workers to accept the humiliating terms of the management?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member quotes from the statement that has been issued by the representative of the Union. But, I believe that it is not mere-threat and they mean closing it down. That is what I learn now.

SRI T. SAMPATH : What are the difficulties experienced by the management?

MR. SPEAKER : The Hon. Minister has already stated that it is not advisable and it is not in the interests of a settlement to go into all these details. If, however, the Hon. Minister is willing to answer the question, I have no objection.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already pointed out in my answer, the point which has provoked the management to decide to close down the concern, as stated by them, is that indiscipline is prevailing among the workers.

*Salem iron ore*

* 861 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer furnished to question No. 301 on 12th March 1958—

(*a*) whether the Government have received the final reports from the Metallurgical Laboratory, Jamshedpur, on the examination of the samples of Salem iron ore; and

**(*b*) if so, whether a copy of it will be placed on the Table of the House?**